ஸ்ரீ:

# ''ஆகில், அந்தப்பாபம் அடிக்கழஞ்சு பெறும்!''

## (பேராசிரியர். Dr. இரா.அரங்கராஜன், M.A.,Ph.,D.,மதுரை)

திருப்பாவையில் ''எல்லேயிளங்கிளியே'' பாசுரத்தின் வ்யாக்யானத்தில் 'ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை' என்ற தொடரை விளக்கி வரும்போது ஆய் என்ற ஜநந்யாசார்யர் அரிய செய்தியொன்றை ஐதிஹ்யமாக மேற்கோள் காட்டியிருக்கிறார். வேறு வ்யாக்யானங்களில் அச்செய்தி இடம்பெறவில்லை. அச்செய்தியின் பின்னணியாக வரலாற்று நிகழ்ச்சியொன்று மறைந்திருக்கிறது. அதனை விளக்குவதாக இக்கட்டுரை எழுதப்படுகிறது.

உள்ளே உறங்குகிற பெண்பிள்ளை ''நானேதான் ஆயிடுக'' என்று இல்லாத குற்றத்தையும் தன்மீது ஏறிட்டுக்கொண்டு ஒருவாறு வாத விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்.

உடனே படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து வாசற்கதவைத் திறந்து எழுப்புகிற பெண்பிள்ளைகளோடு ஒரு நீராகக் கலந்து பரிமாறவேண்டாமோ? இன்னும் காலம் தாழ்ப்பதற்குக் காரணம் என்ன? அரைக்ஷணமும் அவளைப்பிரிய இயலாதவர்கள் வாசலில் கூடியிருக்கிறார்கள். அதையுணர்ந்தால் உறங்குவது போல் படுக்கையில் கிடக்கிற அவள் அரைக்ஷணமும் தாமதிக்கலாமோ? ஒருக்கால் க்ருஷ்ணனைக் கட்டியணைத்துக்கொண்டு இன்னனும் ஏகபோகமாக அனுபவிக்கிறாளோ?

இவ்வாறு நினைவுகளால் அலைப்புண்ட பெண்பிள்ளைகள் கேட்கிறார்கள்; இல்லை, ஆணையிடுகிறார்கள்.

''உன்படுக்கையில் கிடக்கிற க்ருஷ்ணனை இட்டுவைத்து நீ கடுகப்போராய்!'' 'இட்டுவைத்து' என்றால் ஒதுக்கிவைத்து என்றுபொருள்.

அதற்குமேலும் வினாக்கள் தொடர்கின்றன. ''அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களுக்குள்ளது ஒழிய உனக்கு வேறே சில உண்டோ? உன் ஸ்வயம்பாகம் இன்னம் தவிர்ந்திலையோ எங்கள் பெரும்பானை கண்ட பின்பும்? புருஷார்த்தமான இக்கோஷ்டிக்குப் புறம்பாயிருக்கைக்கு மேற்பட்ட அநர்த்தமுண்டோ? விஷயங்களை விட்டுப் புறம்பாக இருக்கலாம்; ஈஶ்வரனை விட்டும் புறம்பாயிருக்கலாம்; ஆத்மாவை விட்டும் புறம்பாக இருக்கலாம்; அடியார்களை விட்டுப் புறம்பாக இருக்கக் கடவையோ?''

ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியைவிட்டு, எம்பெருமானே அழைத்தாலும் அகன்று போதல் நீதியாகுமோ? அதனால் எவ்வளவு லாபம் கிட்டினாலும் அச்செயல் இகழத்தக்கதேயாகும் அன்றோ!

இவ்வுணர்வைப் பல தொடர்களாலும், பெருமாள் இளையபெருமாளைக்

குறித்துச் சொன்ன வாக்யத்தாலும் வ்யாக்யாதாவான ஆய் நன்கு விளக்கிய தோடு நிற்காது ஓர் ஐதிஹ்யத்தையும் சுருக்கமாகக் காட்டுகிறார்.

" 'அரைக்ஷணம் வைஷ்ணவ கோஷ்டியைப் பிரிய நின்று வரும் மாத்$_4$யஸ்த்$_2$யம் எனக்கு என் செய்ய?' என்கிற ஸுப்ரஹ்மண்ய பட்டர் வார்த்தையை ஸ்மரிப்பது" – என்பது அவ்விடத்திலுள்ள வ்யாக்யான ஸ்ரீஸூக்தி.

இங்கே குறிப்பிடப்படும் ஸுப்ரஹ்மண்ய பட்டர் யார்? பெயரை நோக்கினால் ஸ்ரீவைஷ்ணவரல்லாதவராகத் தெரிகிறதே. அப்படியானால் அவருடைய வார்த்தை ப்ரமாணமாக விஸ்வஸிக்கத் தக்கதாகுமா? ஒருக்கால் 'காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்' என்கிற ரீதியில் ப்ரமாணமாகக் காட்டியதாகுமா? மேலும், இவ்வைதிஹ்யத்தில் சுட்டப்படும் வைஷ்ணவ கோஷ்டி எப்பேர்ப்பட்டது? ஸுப்ரஹ்மண்ய பட்டர் மத்யஸ்த்தம் வஹிக்க ஏற்பட்ட ஸம்பவம் யாது? அப்போது ஶைவராகப் பெயரிலிருந்து தோன்றுகிற அவர் வைஷ்ணவ கோஷ்டி மீது ஆழ்ந்த அபிமானம் காட்டியது வியப்பாகவன்றோ உள்ளது! அத்தகைய அபிமானம் விளைவதற்கு என்ன காரணமாயிருக்கும்? ஸ்ரீவசநபூஷணாதி ரஹஸ்யார்த்த விவரண க்ரந்தங்களில் 'இன்னார் வார்த்தையை நினைப்பது... ஸ்மரிப்பது' என்பது போல இங்கு ஐதிஹ்யம் அமைந்திருக்கிறதே! அதனால் ஆழ்பொருளை அடக்கியதாக அவருடைய வார்த்தை பொன்னேபோல் போற்றப்பட்டிருப்பதும் அறியப்படுகிறதே!

இனி, ஸுப்ரஹ்மண்ய பட்டர் யார்? என்பதை ஆராய்வோம். இவருடைய முழுப்பெயர் உடையார் ஸுப்ரஹ்மண்ய பட்டர். கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழச்சக்ரவர்த்தியின் ராஜஸபையில் அமைச்சராகவும், புரோஹிதராகவும் பணியாற்றினார். ஶைவ ஶாஸ்த்ரங்களில் வல்லவராய், சக்ரவர்த்தியால் மிகவும் பஹுமானிக்கப்பட்டு உயர்பதவியில் இருந்தார்.

ஒரு ஸமயம் ராஜகாரியமாய் திருவரங்கம் பெரியகோவிலுக்கு வருகைபுரிந்தார். அப்போது நம்பெருமாள் அனைத்துக் கொத்துப் பரிகரங்களுடன் தீர்த்தவாரி கண்டருளுவதற்காகத் திருப்புன்னைக்கீழ் எழுந்தருளியிருந்தார். ஆங்கே, அந்த கோஷ்டிக்கு நாயகமாக ஸ்வாமி எம்பெருமானார் த்ரிதண்ட ஹஸ்தராக, காஷாயதாரியாக, நெடுகிச் சிவந்த திருமேனியோடும் புன்முறுவல் பூத்த திருமுகத்தோடும் யதிஸார்வபௌமராக நின்றுகொண்டிருந்தார்.

ஸுப்ரஹ்மண்ய பட்டருடைய கண்களை எம்பெருமானாருடைய எழில் உருவம் தன்வசம் கவர்ந்து கொண்டது. காணிலும் உருப்பொலாத மேனிகளையே கண்டு பழகிய ராஜபுரோஹிதருக்கு யதிராஜருடைய திருமேனி

ஆகர்ஷகமாயிருந்தது. அவரையே வைத்தகண் மாறாது விழியினால் பருகிக் களித்தார். அப்போது அடியார்கள் பலரும் கோஷ்டியாக வந்து எம்பெருமானாரை அநுவர்த்தித்துத் தண்டனிடுவதைக் கண்டார் ராஜபுரோஹிதர். அவருக்கு அது புதுமையாயிருந்தது.

''உத்தேஶ்யமான நம்பெருமாள் திருப்புன்னைகீழ் எழுந்தருளியிருக்க அங்குச் சென்று தண்டனிடாது எம்பெருமானார் திருவடியிணைகளையே போற்றித் தண்டனிடுகிறார்களே! பகவத் ஸந்நிதியில் இப்படியும் ஓர் ஒழுக்கமா?'' ராஜபுரோஹிதருக்கு வியப்பாகவும் ஒழுக்கக்கேடாகவும் தென்பட்டது.

'அவர்கள் தான் தண்டனிடுகிறார்கள், ஸந்யாஸியான அவர் அதை அங்கீகரிக்கலாமா? பெருமாளைப் பற்றுங்கோள் என்று தடுத்திருக்கவேண்டும்''. இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்த ராஜபுரோஹிதர் அதற்குக் காரணத்தை எம்பெருமானாரிடமே கேட்டறிய எண்ணம் கொண்டார். ராஜபுரோஹிதர் என்று செருக்கோடு அருகில் வந்தார்.

''ஜீயரே! நான் கேட்கவேண்டியதொரு வார்த்தை உண்டு'' என்று தொடங்கினார் ராஜபுரோஹிதர்.

அவ்வார்த்தைதான் எது? எம்பெருமானார் அடக்கமாகக் கேட்டார்.

''ஸர்வேஶ்வரன் திருமுன்பே சிலர் தண்டனிடா நின்றார்கள். அவர்களும் விவக்ஷிதராயிராநின்றார்கள். தேவரீரும் அதை வேண்டா என்று கூறவில்லை. இதற்குக் காரணம் என்ன?'' என்றார் ஸுப்ரஹ்மண்யபட்டர்.

'இது கேட்கவேண்டிய வார்த்தைதான்; ஆகிலும் நீர் கேட்டறிய விரும்புவது தான் ஆஶ்சர்யமாகயிருக்கிறது'' என்றார் எம்பெருமானார்.

''என்னிடத்தில் என்ன வாசியைக் கண்டு இப்படிக் கேட்கிறீர்?'' என்று எதிர்க்கேள்வி எழுப்பினார் ராஜபுரோஹிதர்.

''நீர் ராஜஸேவை பண்ணித் திரிபவர் ஒருவரன்றோ! ராஜாவின் பக்கல் ஒருவன் கார்யங்கொள்ள வந்தால், அவனுடைய பாதுகைகளை எடுத்துத் தலையிலே வைத்துக்கொள்வதைக் கண்டிருப்பீரே! அப்போது ராஜா அரியணையில் ஏறியிருக்க அவன் காலில் விழாது அவனுடைய பாதுகையைத் தலையிலே வைத்துக்கொள்வது தகாது என்று நீர் தடுப்பீரா? சொல்லும். மேலும், அவன் பாதுகைகளையா கொண்டாடுகிறான்? பாதுகைகளா அவனுக்குக் கார்யம் செய்யப்போகின்றன? பாதுகைகளைச் சுமப்பதால் ப்ரீதனாகிறான் ராஜாவன்றோ!'' என்று எம்பெருமானார் விளக்கியருளினார்.

திருவரங்கருடைய திருவடிநிலைகளாக, அடியார்கள் தம்மை தண்டனிடும் போதெல்லாம், ஸ்வாமி எம்பெருமானார் தம்மை பாவித்துக் கொண்டதை அந்த அதிகாரி குறிப்பால் உணர்ந்துகொண்டார்.

எம்பெருமானுர் மீதும் ஸ்ரீவைஷ்ணவர்களான அடியார் குழாத்திலும் அந்த ராஜபுரோஹிதருக்குப் பெருமதிப்புத் தோன்றியது. அத்வேஷம் ஒன்று அடியாகவே எம்பெருமான் ஸகல நன்மைகளையும் வாரி வழங்கிவிடுகிறுன். அதனுல் உடையார் ஸுப்ரஹ்மண்ய பட்டருக்கு ஸ்ரீவைஷ்ணவ ஸம்பாஷண அங்கீகாரங்கள் ஏற்பட்டுப் பின்னுல் அவருள்ளத்தில் பெருமாற்றங்களை விளைவித்துவிட்டன!

எம்பெருமானுர் காலத்துக்குப் பிறகு நஞ்சீயர் தர்ஶநம் நிர்வஹித்துக் கொண்டிருந்த காலத்திலும் உடையார் ஸுப்ரஹ்மண்யபட்டர் ராஜபுரோஹித பதவியை அலங்கரித்து வாழ்ந்திருந்தார். அக்காலத்திலே தான் கூரத்தாழ்வானை ஆஶ்ரயித்து ஸந்ந்யஸித்துக் கூரநாராயணஜீயர் என்று ப்ரஸித்தி பெற்ற ஜீயர் திருவரங்கத்தில் நம்பெருமாள் கைங்கர்யத்தில் ஊற்றமுடையவராய் அரிய திருப்பணிகள் பலவற்றைச் செய்துவந்தார். அவர், மஹாமாந்த்ரிகராய், கோயிலில் நித்யவாஸம் செய்துவந்தார். கூரத்தாழ்வான் திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியிருந்த காலத்தில் அவர் ஆழ்வானுடைய திருவடிகளை ஆஶ்ரயித்து சிஷ்யரானுர் என்று அறியப்படுகிறது. அவருடைய மாந்த்ரிக ஶக்தியும் ஒருமுறை பகவத் விஷயத்தில் உபயோகமாயிற்று. உபயோகப்படுத்தியவர் ஆழ்வான் தேவிகளான கூரத்து ஆண்டாள். அரையர் ஒருவர் நோய்வாய்ப் பட்டுத் திருவத்யயனேத்ஸவத்திற்கு எழுந்தருள முடியாதிருந்தார். ஆண்டாள் அவரிடத்திலே க்ருபையாலே கூரநாராயணஜீயரை அழைத்து, ''உம்முடைய மந்த்ரங்களும் ஒரு கைங்கர்யத்திலே உபயோகப்படும் என்று சொல்லியிருந் தீரே. நீர் இப்போது அரையரை குணப்படுத்தி நம்பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்யராம்படி பண்ணும்'' என்ற நியமித்தாள். ஜீயரும் ஸுதர்ஶநஶதகத்தைப் பண்ணி அரையரை குணமாக்கிப் பண்டுபோலே ஆக்கியருளினுர்.

கூரநாராயணஜீயர் திருவரங்கம் பெரியகோயிலுக்குச் சேமக்காப்பாகப் பல திருப்பணிகளை ஆற்றிவந்தார். ஒரு வருஷம் ஆடிப்பெருக்கின்போது திருக்காவேரி பெருக்கெடுத்துக் கரைகளை உடைத்துக்கொண்டு திருவரங்கத்துள் புகுந்து திருக்கோயிலைச் சூழ்ந்து கொண்டது, அதனுல் திருக்குறளப்பன் ஸந்நிதி மூழ்கிப்போய்விட்டது. ஜலம் பெருகி ராஜமஹேந்திரன் திருச்சுற்றுக்குள் புகுந்து ஸ்ரீரங்க விமானத்துக்கே ஆபத்து வருமோ என்று அஞ்சும்படியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

கூரநாராயணஜீயர் விரைவாகச் செயல்படத்தொடங்கினுர் தேசாதிபதியான பிரபுவுக்கு செய்தியை அறிக்கை பண்ணினுர். திருக்கோயில் ஸ்ரீஸேநாபதி துரந்தரராய்ப் பணிசெய்த கந்தாடை தோழப்பருடன் கலந்து ஆலோசனை பண்ணினுர். திருப்பணி செய்பவர்களைத் திரட்டினுர். மேற்கே புந்நாகதீர்த்தத் தெருவுக்கு முதலாகத்தொடங்கி வரிசையாக தெருக்கடைசி வரை

திருக்காவேரியை வெட்டி வெள்ளப்பெருக்கை வடிகால் செய்ய வாய்க்காலையும் வெட்டத்தொடங்கினர். அப்படி வெட்டிவிடுமளவில், சிந்தாமணி கிராமவாஸிகளான ப்ராஹ்மணர்கள் தங்கள் ஊர் எல்லையிலே வெட்ட விடமாட்டோம் என்று ஒன்றுகூடி குறுக்கே விழுந்து படுத்து ப்ரதிபந்தகம் பண்ணினர்கள்.

கூரநாராயணஜீயர், 'பெருமாள் கைங்கர்யத்துக்குத் தடை செய்யாதீர்கள் வேறோரிடத்திலே உங்களுக்கு அகங்களை ஏற்படுத்துகிறோம்'' என்று எவ்வளவோ ஸமாதானங்களைச் சொல்லியும் அவர்கள் செவியேற்காது ஆக்ரஹம் செய்யத் தொடங்கினர்கள். பகவத் கைங்கர்ய விரோதிகளின் துராக்ரஹத்தைக் கண்டு ஜீயர் பொறுமையிழந்தார். பலசாலிகளான மல்லர்களின் துணையைக்கொண்டு அவர்களை ஹிம்ஸித்து பலாத்காரமாக அப்புறப்படுத்திக் கால்வாயை வெட்டிவிட்டார். காவிரிப் பெருக்கும் குறைந்து கோயிலும் ஆபத்திலிருந்து தப்பியது.

சிந்தாமணி ப்ராஹ்மணர்கள் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு ஓடினர்கள். சோழச்சக்ரவர்த்தியிடம் ஜீயரின் பலாத்காரச்செயலைத் தெரிவித்து முறையிட்டு நீதி வேண்டினர்கள்.

சோழச்சக்ரவர்த்தி உடனே தன்னுடைய ராஜபுரோஹிதரை அழைத்தான். திருவரங்கம் சென்று சிந்தாமணி ப்ராஹ்மணர்களையும் ஜீயர்ஸ்வாமி பரிஜனங்களையும் கூட்டி மத்யஸ்த்தராக நின்று நீதி விசாரணை செய்து ந்யாயம் சொல்லிவருமாறு ஆணையிட்டான்.

உடையார் ஸுப்ரஹ்மண்ய பட்டர் ஆலோசிக்கத் தொடங்கினர். ராஜாஜ்ஞையை நிறைவேற்றவேண்டுமானல், பக்ஷபாதமில்லாதிருப்பதற்காக ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியை பஹிஷ்கரித்து மத்யஸ்த்தராக இருந்து குறை கேட்க வேண்டும். ஸாமான்ய ப்ராஹ்மணர்களின் கோஷ்டியைப் புறக்கணிப் பதில் அவருக்குக் கஷ்டமோ நஷ்டமோ ஒன்றும் தோன்றவில்லை. அன்று ஒருநாள் நம்பெருமாள் திருவோலக்கத்தில் எம்பெருமானுரைத் தண்டனிட்ட ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டி அவருடைய மனத்திரையில் பசுமையாகப் ப்ரகாஶித்தது. அதற்குப் பிறகு ராஜஸேவையாய்ப் பலமுறை திருவரங்கம் சென்றபோதெல்லாம் அவர் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்ததும் நினைவில் ஓடியது. அப்பேர்ப்பட்ட அடியார் குழாங்களாய், நிலத்தேவர்களாய், செழுமாமணிகளாய், பேராளன்பேர் ஓதுமவர்களாய், நெடுமாற்கு அடிமையினும் நேமிப்பிரான் அடியார்தம் இன்பமிகு பெருங்குழுவே கண்ணுக்கினிய காட்சியாய்க் கொண்ட ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியை, பக்ஷபதிக்காமல் இருப்பதற்காகப் பிரிந்து நின்று மத்யஸ்த்தம் வஹிப்பது அவருக்கு அறவே பிடிக்கவில்லை. அந்த மத்யஸ்த்த விசாரணையால் வரும் பெயரும் புகழும் அவருக்கு விஷமாகப்பட்டன. திருமாலடியாரைப்

பூசிக்காது புறக்கணித்து நிற்பதை அவரால் கற்பனைகூடச் செய்யமுடியவில்லை. அதனால் அஞ்சாது சோழச்சக்ரவர்த்தியை அணுகி, ''அரசே! அரைக்ஷணமும் அடியேன் வைஷ்ணவகோஷ்டியைப் புறக்கணித்து இருக்க இயலாது. அதனால் என்ன பயன்? ஆதலால் வேண்டேன் அப்பதவியை'' என்று விடையிறுத்தார்.

சோழப்பேரரசன் அதிர்ச்சியடைந்தான். ராஜபுரோஹிதரான உடையார் ஸுப்ரஹ்மண்ய பட்டரின் மறுப்புரை திருவரங்கத்துக்கு எட்டியது. அவருடைய வார்த்தையை நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டனர். பொன்னேபோல் போற்றினர். வருங்காலத்துக்கு அவ்வார்த்தையைச் சேமித்து வைத்தனர்.

சோழச்சக்ரவர்த்தி அத்துடன் நிற்கவில்லை. தானே நேரில் திருவரங்கம் சென்று நீதி விசாரணை செய்யப் புறப்பட்டான்.

திருவரங்கப் பெருநகருக்குள் ப்ரவேசித்து யானைக் கழுத்திலிருந்து கீழே இறங்கினன் அரசன். சிந்தாமணி ப்ராஹ்மணர்கள் குறைகளை முறையிட்டு முடித்தார்கள். கூரநாராயணஜீயர் அழைக்கப்பட்டார். த்ரிதண்ட ஹஸ்தராய், காஷாயதாரியாய், பன்னிரு திருமண்காப்புக்கள் ப்ரகாசிக்கும் அழகிய திருமேனியோடு மஹாதேஜஸ்வியாக ஜீயர் சோழராஜாவுக்கு முன்வந்து நின்ருர். சக்ரவர்த்திகளுக்கு முன் ஜீயர்ஸ்வாமி கம்பீரமாக நின்ருர். அவருடைய திருமுகத்தில் மந்தஹாஸமே தவழ்ந்தது. சோழராஜா அதிகாரத்தவனியோடு கேட்டான்.

''ஜீயரே! நீர் ஒரு ஸந்யாஸி. 'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்று வேதம் விதித்திருப்பதை அறியீரா?'',

''நன்கு அறிந்திருக்கிறேன்''.

''அறிந்திருந்தும் ப்ராஹ்மணர்களுக்கு ஹிம்ஸை செய்தது நியாயமா?''.

''வேதவேத்யனை பகவானுடைய வாக்யத்தை ப்ரமாணமாகப்பற்றி அப்படிச் செய்தேன்''.

''ஹிம்ஸையாகிற பாபத்தை உங்கள் பகவான் ஆதரித்த இடமும் உண்டோ!'',

''மந்நிமித்தம் க்ருதம் பாபமபி புண்யாய கல்பதே'' என்று பகவத்வாக்யம் கிடக்கிறது காண்! ஆதலால் அவனுக்காகப் பாபம் செய்யத் துணிந்தேன்.''

சோழச்சக்ரவர்த்தி ஜீயரின் உள்ளக்கிடக்கையை உணர்ந்துகொண்டான். ''என் பொருட்டாகச் செய்யப்பட்ட பாபமானது புண்யமாகவே என்னால் கொள்ளப்படுகிறது'' என்ற எம்பெருமானுடைய வாக்யம் அவனுடைய மனதில் ஆழப்பதிந்துவிட்டது! அதற்குமேல் சோழராஜா நீதி விசாரணை செய்யவில்லை. ஜீயரை அருகில் அழைத்து, ''ஜீயரே! ஆகில், அப்பாவம்

அடிக்கழஞ்சு பெறும்! விலைகொடுத்து வாங்கவேண்டிய ஓர் பழி அது; நீர் மஹாபுண்யசாலியாகக்கடவீர்.'' என்று தீர்ப்புரை வழங்கினான். ஜீயர் பரமசாந்தரானார். ராஜபுரோஹிதரான உடையார் ஸுப்ரஹ்மண்ய பட்டரின் வார்த்தை ஐதிஹ்யமாகப் போற்றப்பட்டது. சோழராஜாவின் தீர்ப்புரை திருவரங்கத்தில் கல்வெட்டுக்களிடையே பொறிக்கப்பட்டது.